மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 402. திரு. வ. சத்தியமூர்த்தி. மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

402—

சீர்மரபினர்கள் வீடு கட்ட மானியம்.

*4738—திரு. வ. சத்தியமூர்த்தி :

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சீர்மரபினர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள மூன்றில் இரண்டு பங்கு செலவுத் தொகையை மானியமாக அரசு வழங்கி வந்த திட்டம் தற்போது கைவிடப்பட்டுவிட்டதா ?

(ஆ) ஆம் எனில், வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : 1981–82 ஆம் ஆண்டிற்குப் பிறகு குறிப்பிட்ட தொகையில் வீடுகள் கட்ட இயலாததால் திட்டம் நிறுத்தப்பட்டு விட்டது. தற்போதுள்ள நிதி நிலையைக் கருத்தில் கொண்டு புதிய திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 403. திரு. வி. கே. சின்னசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

403—

உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம்.

*1340—திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு கல்விஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி பனையம்பள்ளியில் ஐந்து ஏக்கர் நிலம் இருந்தும், அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டப்படாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1992 மார்ச் 31]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு அறியும்.

(ஆ) ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையில் / இரண்டாம் பகுதித் திட்டத்தில் பள்ளிக் கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கப்படுகிறது. இந்நிதி நிலைமைக்கேற்ப கட்டிடங்கள் கட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையம்பள்ளி உயர்நிலைப் பள்ளி எந்த ஆண்டு நடு நிலைப்பள்ளியாக இருந்து உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப் பட்டது. இதிலே எவ்வளவு மாணவ மாணவியர்கள் பயின்று வரு கிறார்கள். அதிலே இவ்வளவு நாள் கட்டிடம் கட்டப்படாமல் இருந்ததற்கு அரசிடம் வேறு ஏதேனும் காரணம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த பனையம்பள்ளி அரசு உயர்நிலைப் பள்ளி 1-8-1988-ல் துவங்கப்பட்ட பள்ளியாகும். இப்பள்ளியின் மொத்த மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை 252 ஆகும். இப்பள்ளிக்குச் சொந்தமாக 4 ஏக்கர் 29 சென்ட் நிலம் உள்ளது. இப்பள்ளிக்கு என சொந்தமாகக் கட்டிடம் ஏதும் இல்லாத காரணத்தால், இப் பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக் கட்டிடத்திலேயே இயங்கி வருகிறது. இதுவரையிலும் கட்டாமல் இருந்ததற்குக் காரணம் பணம் இல்லை என்ற நிலைமைதானே தவிர, வேறு இல்லை. ஆகவே இருக்கிற நிதி நிலைமைக்கு ஏற்ப இந்தப் பனை யம்பள்ளியினுடைய கட்டிடத் தேவையை அரசு பரிசீலிக்கும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது அனைத்திந்திய அண்ணா தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் அப்போது நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டது. பின்பு தி.மு. கழக ஆட்சி வந்த காரணத்தினால் இந்தப் பள்ளியைக் கவனிக்கா மல் விட்டு விட்டார்கள். ஆகவே மீண்டும் இப்போது நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் வருகிற 1992—93 ஆம் ஆண்டில் கட்டிடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ? அதோடு மட்டுமல்லா மல் இது மிகவும் வறட்சியான பகுதி என்பது மாண்புமிகு அமைச் சர் அவர்களுக்கே தெரியும். குடிநீருக்கேகூட தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிற நிலைமை. அதற்கு வேண்டிய 25 ஆயிரம் ரூபாயைக்கூட நான்தான் பொது மக்களைச் சந்தித்து ஊர். ஊராகச் சென்று 25 ஆயிரம் ரூபாயை வசூல் செய்து கட்டினேன்,

[1992 மார்ச் 31

நிலம் வறட்சியாக இருந்தபோதிலும் 5 ஏக்கர் நிலத்தை பொது மக்கள் அவர்களின் சார்பாகக் கொடுத்தார்கள். ஆகவே தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டிலாவது அந்தப் பள்ளிக்கான கட்டிடம் கட்டுவதற்கு உதவுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாத் தொகுதி மக்களுமே புரட்சித் தலைவி அவர்களை ஆதரித்து ஒட்டுப்போட்டிருக்கிற காரணத்தால் இருக்கின்ற குறைவான நிதி வசதியை வைத்துக் கொண்டு எல்லாத் தொகுதி மக்களையுமே நாங்கள் திருப்திப் படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த வரையறைக்கு உள்ளேதான் மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்களின் கோரிக்கையைப் பரிசீலிக்க வேண்டியதாக இருக்கிறது. அவருடைய கோரிக்கை அனுதாபத்திற்கும் பரிசீலனைக்கும் உரிய ஒன்றுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 404. டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்.

404—

ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்தல்.

*3125—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி தொகுதியில் குலசேகரன்புதூர், வடக்கு தாமரைக்குளம் ஆகிய இரு இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி தொகுதியில் குலசேகரன்புதூர், வடக்கு தாமரைக்குளம் ஆகிய இரு இடங்களில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்க அரசிடம் ஏதும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கு தாமரைக்குளம் பகுதியில் கிட்டத்தட்ட 8 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை என்ற காரணத்தினால் சுமார் 8 கிலோ மீட்டர் தாண்டி கொட்டாரம் என்ற ஊரில்